# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

EA.No.2/2025 In Ep.No.9/2023 In OS.No.338/2010

தேதி-27.10.2025

(R.W.1) - செல்வராஜ்

குறுக்கு விசாரணை

1. அசல் வழக்கு எண்.338/2010 என்ற வழக்கின் மீது மேல் முறையீடு செய்து தற்போதும் பத்மனாபபுரம் சார்பு நீதிமன்றத்தில் SR stage -ல் நிலுவையில் உள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. மேல் முறையீடு வழக்கில் வழக்கறிஞர் மூலம் நான் ஆஜராகி வருகிறேன் என்றாலும் வழக்கு பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேல் முறையீடு விவரம் தெரிந்தும் இவ்வழக்கில் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இம்மனுவின் மனுதாரர் ஆன ஜெயபாலுக்கு நோட்டீஸ் சார்வு செய்யப்பட்டதா என்றால்அதுபற்றி தெரியாது. மேற்சொன்ன ஜெயபால் கேரளாவில் கடந்த 10 ஆண்டுகளாக கட்டிட வேலை செய்து வருகிறாரா என்றால் அதுபற்றி தெரியாது. மேற்சொன்ன ஜெயபாலை எனக்கு அடையாளம் தெரியுமா என்றால் அதுபற்றி தெரியாது. நீதிமன்றத்தில் மேற்சொன்ன ஜெயபால் சாட்சியம் அளித்த பிறகு தான் தெரியும். மேற்சொன்ன ஜெயபாலுக்கு கட்டிட வேலையில் விபத்து ஏற்பட்டதால் காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிட்சை பெற்று வருவதால் தான் ஊரில் இருந்து வருகிறார் என்றால் அதுபற்றி தெரியாது.

2. தற்போது மனு பட்டிகை சொத்தில் யார் வசித்து வருகிறார் என்றால் இறந்த ஆரோக்கியம் என்பவரின் மனைவி வசித்து வருகிறார். ஆராக்கியத்தின் மனைவி பெயர் என்ன என்றால் செல்லத்தாய் ஆகும். வேறு யாராவது இருக்கிறார்களா என்றால் இல்லை. மனு பட்டிகை சொத்து வீட்டில் செல்லத்தாய் மற்றும் ஆரோக்கியத்தின் மகனான இந்த மனுதாரர் மற்றும் குழந்தைகள் வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல செல்லத்தாய் மட்டும் தான் வசித்து வருகிறார். இந்த மனுதாரரை எதற்காக இந்நிறைவேற்று மனுவில் கட்சியாக சேர்த்தேன் என்றால் நான் சேர்க்கவில்லை. மேற்சொன்ன மனுதாரர் ஜெயபால்க்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒரு தலைபட்ச உத்தரவை ரத்து செய்துவிட்டு நிறைவேற்று மனுவில் கட்சியாக சேர்த்து நடத்த எனக்கு ஆட்சேயபனை ஏதும் இல்லை என்றால் சரியல்ல. கள்ளதனமாக போடப்பட்ட மனுவாகும். மனு பட்டிகை சொத்தின் 4 பக்க எல்கை மட்டும் தெரியுமா என்றால் தெரியாது. நான்

சொல்வது போல் மனுபட்டிகை சொத்தை பற்றி எந்த தகவலும் தெரியாது என்றாலும் மனுதாரர் குடும்பத்தைபற்றி தெரியாது என்றாலும் இந்த மனு மட்டும் வழக்கு பற்றி தெரியாது என்றால் சரியல்ல. இம்மனு அனுமதிக்க தகுதியுடையது என்றால் சரியல்ல.